பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (13.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 258

## குடாநாட்டில் போர் அரங்குகள் விரிவடைகின்றன

# மண்டைதீவிலும் கடுஞ்சண்டை!

# முகமாலை தம்வசம் என்கின்றனர் புலிகள்

# கிளாலி முன்னரங்கப் பகுதியிலும் தீவிர சமர்!

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்,13

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றுமுன்தினம் முகமாலை பகுதியில் மூண்ட தீவிர சண்டை நேற்று இரண்டாவது நாளாக அந்தப் பகுதியில் உக்கிர சமராக நீடித்தது. அதேவேளை, யாழ்.நகருக்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்றான மண்டைதீவுப் பகுதியில் புதிதாக நேற்று சமர் வெடித்துள்ளது.

முகமாலை - நாகர்கோவில் - கிளாலி முன்னரன்களை உடைத்துக்கொண்டு தமது படை அணிகள் யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறுகின்றன என்று புலிகள் கூறுகின்றனர். விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தின் மீது பல முனைகளில் தாக்குதல் தொடுத்துள்ள போதிலும் அங்கு தனது படைகள் முழு ஸ்திர நிலையில் உள்ளன என்று அரசுத் தரப்பு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் படையணிகள் முகமாலை மற்றும் கிளாலி, நாகர்கோவில் பகுதிகளில் அமைந்திருந்த இராணுவத்தின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்தெறிந்து கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்னேறுகின்றன என்று புலிகளின் அதிகார பூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' தெரிவித்தது. நேற்றைய சண்டைகளின் போது படையினரின் பலாலிப் பெருந்தளம் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தினர் என்றும் 'புலிக

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் எண்ணம் இப்போதைக்கு இல்லை!

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் தகவல்

லண்டன்,ஓக.13

முகமாலைப் பகுதியில் சிறிது பின்வாங்கியுள்ள படையினரின் பீரங்கி நிலைகளைத் தாக்குவதற்காக எமது போராளிகள் சிறிது முன்னேறி இருக்கிறார்கள். பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்திவரும் அரசுப் படைகளைப் பின்னகர்த்துவதே எமது தற்போதைய நடவடிக்கைகளின் நோக்கம்.

இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

நேற்றுவரை கடந்த சண்டைகளில் தங்களது தரப்பில் 12 போராளிகள் வீரச்சாவடைந்தனர் என்றும், 12 பேர் காயமடைந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

*கேள்வி:* யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் எண்ணம் இருக்கிறதா?

*பதில்:* எமது மக்கள் மீது துன்புறுத்தல்களைச் செய்கின்ற - ஷெல்வீச்சுக்களை நடத்துகின்ற - படையினரை அவர்களது நிலைகளில் இருந்து பின்னகர்த்துவதே - பின்னே தள்ளி விடுகின்றதே - இந்தக் கட்டத்தில் எமது நோக்கமாக இருக்கிறது.

*கேள்வி:* அடுத்த கட்டத்தில் உங்கள் நடவடிக்கை என்னவாக இருக்கும்?

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் இன்னமும் படையினர் ஸ்திர நிலையில் என்கின்றது அரசு!

### நேற்றைய சண்டையில் 3 அதிகாரிகள் உட்பட 27 துருப்பினர் பலி! 80 பேர் காயம்!

கொழும்பு,ஓக.13

புலிகள் பலமுனைகளில் தாக்குதல்களைத் தொடுத்துள்ள போதிலும் யாழ்ப்பாணம் இன்னமும் முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக் கெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப் பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதில் அரசு உறுதியாக உள்ளது. விடுதலைப் புலிகள் நாட்டை நிச்சயமாக யுத்தத்துக்குள் தள்ளியுள்ள போதிலும் அரசு சமாதானத்தின் மீதே உறுதியாக உள்ளது - என்றும் ரம்புக் வெல தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் மோதல்கள் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளர் பிரிகேடியர் அதுல ஜெயவர்த்தன தெரிவித்தார். மண்டைதீவில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முகமாலையில் படையினர் பாதுகாப்பாக உள்ளனர். நேற்று யாழ்ப்பணத்தில் இடம்பெற்ற மோதல்களின்போது 3 அதிகாரிகள் உட்பட 27 படையினர் உயிரிழந்துள்ளனர். 8 அதிகாரிகள் உட்பட 72 படையினர்வரை காயமடைந்துள்ளனர். பலாலி இராணுவத்தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஹெலிகொப்டர் ஒன்று சேதமடைந்தது. கட்டுப் பாட்டுக் கோபுரத்திற்கும் சிறு சேதம் ஏற்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிகள், மின்சாரம் துண்டிப்பு!

## முற்றுகை நிலைக்குள் மக்கள் பெரும் அவதி!

யாழ்ப்பாணம்,ஓக.13

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மோதல்கள் வெடித்திருப்பதை அடுத்து நாட்டின் ஏனைய பகுதிகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு ஒரு விதமான முற்றுகை நிலைமை உருவாகியிருக்கிறது.

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசித் தொடர்புகள் பெரும் எண்ணிக்கையில் துண்டிக்கப்பட்டு விட்டன.

கைத்தொலைபேசி சேவைகள் நேற்றுக் காலை முதல் சீர்குலைந்தன வெளியிடங்களுக்கான இணைப்புகளை கைத் தொலைபேசிகள் மூலம் ஏற்படுத்திக்கொள்ள முடியாது மக்கள் நேற்று பகல் முழுவதும் அவதிப்பட்டனர். சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் தரைத் தொலைபேசிச் சேவை நேற்று நண்பகலுக்குப் பின் சீர் குலைந்தது. தொடர்ந்து ஏனைய தனியார் தொலைபேசி இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன. அவ்வப்போது அதிஷ்ட வசமாக இணைப்புகள் கிடைத்த நிலைமையும் நேற்று மாலைக்குப் பின் அடியோடு தடைப்பட்டது.

தொலைபேசிச் சேவைகள் சீர்குலைந்ததால் தகவல்களை பரிமாறிக்கொள்ள முடியாது மக்கள் அவதிப்பட்டனர். என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடியாது அவதிப்பட்டனர். தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டது குறித்து ரெலிக்கொம் உயர் அதிகாரியிடம் கேட்டபோது மின்சார தடை காரணமாக தொழில்நுட்ப உபகரணங்கள் சேதமுற்றதாகவும் அதனாலேயே தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

**மின் விநியோகமும் சீர்குலைந்தது**

இதேவேளை -

மின்விநியோகமும் பெரும்பாலும் முற்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மோதலை உடனடியாக கைவிட கோருகின்றது இணைத் தலைமை!

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற போர் நடவடிக்கைகளை - மோதல்களை இரு தரப்பினரும் உடனடியாகக் கைவிட்டு மக்களின் மனிதாபிமானப்பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

இலங்கையின் வடக்கு கிழக்கில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற மோதல் தொடர்பாக இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று அவசரமகக் கூடி ஆராய்ந்திருக்கின்றனர்.

இது தொடர்பாக இணைத் தலைமை நாடுகள் சார்பில் நேற்று மாலை அறிக்கை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கேதீஸ்வரன் நேற்றிரவு சுட்டுக்கொலை

கொழும்பு,ஓக.13

சமாதான முயற்சிகளின் இணைப்புச் செயலகத்தின் பிரதிச் செயலாளர் நாயகமான கேதீஸ்வரன் லோகநாதன் நேற்றிரவு 9.30 மணியளவில் தெகிவளையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

தெகிவளையில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிவிட்டனர். களுபோவில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் மரணமானார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் உறுப்பினராக இவர் முன்னர் செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போர் நிறுத்தம் இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது!

### கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.13

தற்போது நடைபெறும் சண்டையைப் பார்த்தால் போர்நிறுத்தம் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

இப்படித் தெரிவித்திருக்கிறார் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தோர்பின் எமர்ஸன் அவர் மேலும் கூறியதாவது:

இரு தரப்பினரும் கனரக பீரங்கிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர். சண்டை கடுமையாக நடக்கிறது. இது கவலை தரும் விடயம் ஏற்றுக்கொள்ளக் கூடியதை விட அதிகளவில் சண்டை நடக்கிறது. சண்டை நடப்பதால் அந்தப் பகுதிக்கு எங்களால் செல்ல முடியவில்லை.

பெரிய அளவில் சண்டை நடக்கிறது. போர் நிறுத்த உடன்படிக்கை கூறும் விடயங்களைத் தாண்டி சண்டை நடக்கிறது. சண்டை நடப்பதால் அந்தப் பகுதிக்குச் சென்று மக்கள் உயிரிழந்துள்ளனரா என்பதைப் பார்த்துக் சொல்ல முடியாதுள்ளது. சண்டை நிறுத்தப்பட்டவுடன் அங்கு சென்று விசாரணை நடத்துவோம். தற்போதைய மோதல் குறித்து போர்நிறுத்தக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 6ஆம் மாத நினைவலைகள்



அன்னை மடியில் 27 . 12 . 1962

ஆண்டவன் அடியில் 18 . 02 . 2006

### மாணிக்கம் சிறிதரன்

(தென்மராட்சி சிற்றூர்திச் சங்க சாரதி)

பாதகரின் நோய் ஒன்று உம் பாச மேனியில் பாய்ந்ததையா
பாதியிலே என் மாங்கல்யம் காற்றாய் பறந்ததையா
வேதனைதான் என் வாழ்வில் மீதி என்று
அந்த வேதியன் எழுதி வைத்தானோ!
வெந்தழலில் விழுந்த புழுப்போல் வெதும்புகிறேன்
ஆறுதல் கூற உம் வார்த்தைக்கு ஏங்குகிறேன்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.* (53034)

திருமதி மாலினி சிறிதரன்
*(யா/மந்துவில் றோ.க.த.க.வி., கொடிகாமம்)*

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 ✱ 01 ✱ 1957

மறைவு 29 ✱ 07 ✱ 2002

### திருமதி தர்மகுலசிங்கம் கமலாதேவி

ஆண்டுகள் நான்கு சென்றாலும் அழுதகுரல் ஓயவில்லை?
மாண்டதென்று யார் சொன்னார்
மனதில் என்றும் நீங்கள் அம்மா!
தேறுதல் சொல்லத் தெய்வமே வந்தாலும்
தேறிடுமோ எமதுள்ளம்
தெரியாதா இது உங்களுக்கு?

நுணாவில். (53234) (24)

**கணவர், பிள்ளைகள், உறவினர்கள்.**

## கடையடைப்பின்போது தமிழர்களின் கடைகளை தாக்க முயற்சி!

கொழும்பு, ஓக. 12

மூதூரில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கதவடைப்புப் போராட்டத்தை ஒட்டி கொழும்பு நகரின் சில பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது.

முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பிரதேசங்களில் இந்தக் கதவடைப்புப்போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது தலைநகரின் சில இடங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களை கும்பல் ஒன்று தாக்க முயற்சித்தது என்று கூறப்படுகிறது.

மருதானை மற்றும் ஆமர்வீதி பகுதிகளில் தமிழருக்குச் சொந்தமான உணவு விடுதிகள் மற்றும் கடைகளை மூடுமாறு கேட்ட கும்பல் ஒன்று திறந்திருந்த கடைகளுக்குள் புகுந்து தாக்கமுற்பட்டது. இதனையடுத்து அந்த இடங்களுக்கு வந்த பொலிஸார் கடைகளுக்கு பாதுகாப்பு வழங்கினர்.

மூதூரில் மோதல்கள் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு நகரமண்டபப் பகுதியிலுள்ள தெமட்டகஹ பள்ளிவாசல் முன்றிலில் முஸ்லிம் அமைப்புகள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தின.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவே கொழும்பில் முஸ்லிம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் கடையடைப்புச் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (ஐ)

## கந்தளாயில் குண்டுவெடித்து சிங்களவர்கள் மூவர் மரணம்

கொழும்பு,ஓக.13

கந்தளாயில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிங்களவர்கள் மூவர் உயிரிழந்திருக்கின்றனர்.

கைவிடப்பட்ட நிலையில் இருந்த வெடிபொருள் ஒன்றை இவர்கள் மூவரும் பரிசோதித்துப் பார்த்தபோது அந்த வெடிபொருள் பாரிய சத்தத்துடன் வெடித்ததாக தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றயவர் படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீதைப்பிள்ளை சதாசிவம்

*(30 B, விதானையார் வீதி, சுண்டிக்குளி)*



காவலூர் - சுருவிலைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி, சுண்டிக்குளியை வதிவிடமாகவும் லண்டனில் வசித்தவருமான திருமதி சீதைப்பிள்ளை சதாசிவம் லண்டனில் 08.08.2006 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா சதாசிவத்தின் அன்பு மனைவியும் சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவானர் - தங்கம் தம்பதியரின் மகளும் சுண்டிக்குளியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா - தையலம்மை தம்பதியரின் மருமகளும் லண்டனில் வசிப்பவர்களான பத்மநாதன் (முன்னாள் கொழும்பு விஜயா றேடிங் ஏஜென்சி பங்காளர்), யோகராசா, பத்மராணி, அருணகிரி, ரகுநாதன், ரதிதேவி (கனடா) மற்றும் லண்டனைச் சேர்ந்தவர்களான ரேவதி, நாவேந்தன், யோகாம்பிகை ஆகியோரின் பாசமுள்ள தாயும், லண்டனில் வாழ்பவர்களான விமலாதேவி (யாழ்ப்பாணம்), வசந்திரா (இணுவில்), துரைராஜசிங்கம் (யாழ்ப்பாணம்), பங்கயற்செல்வி (சுருவில்), சுமதி (சுதுமலை), லோகநாதன் (கோண்டாவில்), விக்னேஸ்வரன் (சண்டிலிப்பாய்), உமாதேவி (இணுவில்), இராஜேந்திரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் ரவிசங்கர், அர்ச்சுணா, திருமேகன், அர்ச்சனா, றஞ்சித், தினேஸன், கிருத்திகா, நிருத்திகா, ஜனகன், திவ்ஜா, மயூரா, கார்த்திகா, திவ்யன், பிரதீபன், அபிராமி, நர்மதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தெய்வானை நடராஜா (சுருவில்), கண்மணி சுந்தரம் (கரம்பொன்), பொன்னம்மா கந்தையா (அனலைதீவு), மங்களம் விக்னராஜா (கரம்பொன்), மாணிக்கம் சுப்பையா (சுருவில்), வீரசிங்கம் (சுருவில்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் கந்தையா (லண்டன் - அனலைதீவு), தங்கரத்தினம் (கனடா - சுருவில்) மற்றும் காலஞ்சென்றவர்களான சிவகுரு (கொக்குவில்), பொன்னாம்மா (யாழ்ப்பாணம்), பூரணம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.08.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மேலதிக தொடர்புகள்:*
*ச.பத்மநாதன் (மகன்)*
*தொ.பே:*
*0208 908 5413*
*0208 908 0551* (53264)

தகவல்:
**வி.சச்சிதானந்தன் (பெறாமகன்)**
*30 B, விதானையார் வீதி, சுண்டிக்குளி.*

### கந்தையா குணரத்தினம் (J.P.U.M)

*(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், பணிப்பாளர் - பொது முகாமையாளர் சிலிங்கோ கொன்சல்யன்சி அண்ட் அலீட் சேவிஸ், அரிமா சங்க யாப்பு பிரதேச தலைவர் - அரிமாக் கழகம் - டிஸ்ரிக் 306 B 1, சாரணர் தலைமைக் காரியாலயம் ஆணையாளர்)*

மலேசியாவை பிறப்பிடமாகவும் தாவளை, வட்டுக்கோட்டையையும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த கந்தையா குணரத்தினம் அவர்கள் (09.08.2006) புதன்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் தயாவதனியின் அன்புக் கணவரும் லக்ஷ்மன் (**C.M.R** கனடா), தக்சாயினி (ஆஸ்திரேலியா), சஜீவன் (பிரித்தானிய உயர் ஸ்தானிகர் தூதரகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபனின் (கிரே ஸ்டோன் புரடக்ஷன் - ஆஸ்திரேலியா) மாமனும் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையா - இராசம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற டாக்டர் கோபாலசிங்கம் - சிவபாக்கியவதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேஜர் ரத்தினம் காலஞ்சென்ற ராசரத்தினம் (நில அளவையாளர்), நவரத்தினம் (ஏலவிற்பனையாளரும் விலை மதிப்பாளர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஏ.எப். றேமன் மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு இன்று (13.08.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*T 3/8, அன்டர்சன் தொடர்மாடி,*
*கொழும்பு - 5*
*தொ.பே:*
*2585378, 2500063*

(சி-50771)

தகவல்:
**குடும்பத்தினர்**

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**கைதடி வடக்கைச் சேர்ந்த கௌரீசன் சாவகச்சேரியைச் சேர்ந்த தீபா தம்பதியரின் செல்வப் புதல்வன்**

### தேனுஹர்சன்

*தனது முதலாவது பிறந்த நாளை கொக்குவிலிலுள்ள தனது இல்லத்தில் இன்று (13.08.2006) ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். ஹரிஸ் குட்டியை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா , பூட்டன், பூட்டி, ஜேர்மனியில் வசிக்கும் பாதன் மாமா, மதியத்தை, மோகனன் மச்சான், ருதர்சனன் மச்சான், தரணி மச்சி, நோர்வேயில் வசிக்கும் மதி மாமா, சுகி அத்தை, கௌசி மச்சி, பபிஷா மச்சி மற்றும் சுதன் சித்தா, பிரான்சில் வசிக்கும் பரன் சித்தா, நோர்வேயில் வசிக்கும் சிவாச் சித்தா, தர்சி அத்தை, ஜேர்மனில் வசிக்கும் மோகன் சித்தா, சூட்டி அன்ரா, நர்மிதா அக்கா, நந்திதா அக்கா, துஷா அன்ரா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் குருநாதர் சுவாமி அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.*

*நந்தாவில் லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*

(53269)

**அப்பா, அம்மா.**


கிளாஸ் போகாமலே உங்களுக்கு ENGLISH கற்க வேண்டுமா?

UNION கல்வி நிறுவனம் வழங்கும்
தபால் மூல ஆங்கில பாடநெறியை தொடருங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து கொண்டு ஆங்கிலத்தை மிக குருகிய காலத்தில் சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக்கொள்ளலாம்.
கிளாஸ் போகும் காலம், நேரம், மீதியாக்க முடியும் அவதிகள் இல்லை.

இலவசம்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
அழகிய குடை ஒன்று இலவசமாக வழங்கப்படும்

3 மாத முடிவில் அங்கிகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும் அது எதிர்கால தொழில் முயற்சிக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு 5/= பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெறவும்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

SunRay ads



60 Day's ENGLISH COURSE

இலவச தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

இலகுவில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு சிறந்தது ஒரு வழிகாட்டி ENGLISH LANGUAGE யின் தபால் மூலம் ஆங்கிலப் பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ்
விளக்கத்துடன் கற்றுக்கொடுக்கப்படும்.
தமிழ் எழுத, வாசிக்க தெரிந்திருந்தால் போதும்

DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ்
விளக்கத்துடன் கற்றுக்கொடுக்கப்படும்.

FREE FREE
இலவசம் இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
இலவச DIALOG GSM இணைப்பு
இலவச 30 day's easy way English Book
இலவச கைக்கடிகாரம் WATCH ஒன்று
ஓர் அளவு ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு உகந்தது

பாடநெறிக்கட்டணம் அறிவிடப்படமாட்டாது.

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

எமது பாடநெறியில் இணைவதற்கு வயது கட்டுபாடோ ஆங்கில முன் அறிவோ தேவை இல்லை. பாடசாலை மாணவர்கள் தொழில் புரிவோர் யாவருக்கும் உகந்த முறையில் பாடநெறிகள் தயார்செய்யப்பட்டுள்ளன.


மேலதிக விபரங்களுக்கு 5/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 0777-802849

SunRay ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத்தங்கல் முகாம்களை இலக்குவைத்து விமானத் தாக்குதல்; அச்சத்தில் முல்லை. மக்கள்



முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் அழிவடைந்த 5 ஆயிரத்து 457 வீடுகளுக்கு பதிலாக தற்போது 676 நிரந்தர வீடுகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவினை ஆழிப்பேரலை தாக்கி தற்போது 20 மாதங்கள் கழிந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலம் பேரவலமாகத் தொடர்கிறது.

முல்லைத்தீவினை ஆழிப்பேலை தாக்கியதைத்தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெற்றன. பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றப்பட்டனர்.

## வன்னிமடல்

6 மாதத்தில் நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்படும். நீங்கள் இடைத்தங்கல் முகாம்களில் இருங்கள் என்று ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முல்லைத்தீவு அரச செயலகத்தினால் நம்பிக்கையூட்டப்பட்டது.

ஆனால், ஆழிப்பேரலை ஏற்பட்டு 20 மாதங்கள் கழியும் நிலையில் 676 நிரந்தர வீடுகள் மட்டும் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் ஆமை வேகத்தில் நிகழ்ந்துகொண்டிருப்பதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு -

முதலாவது புலிகளுக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட பொதுக் கட்டமைப்பு கையொப்பமிடலுடன் முடிவுக்கு வந்தமை ஆழிப்பேரலை ஏற்பட்டவுடன் அதற்கென உருவாக்கப்பட்ட பொதுகட்டமைப்புத் திட்டமிட்ட ரீதியில் அரசு நடைமுறைப்படுத்தாமையால் தமிழர் தாயகத்தின் ஆழிப்பேரலை கட்டுமானங்கள் முடக்கம் காணப்பட்டுள்ளன.

இரண்டாவது பொதுக்கட்டமைப்பு செயற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் தமது முதலீடுகள், வேலைத்திட்டங்களை செயற்படுத்த முன்வந்த பல அரச, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் தமது வேலைத் திட்டங்களில் இருந்து பின்வாங்கின அல்லது நிறுத்திக்கொண்டன.

மூன்றாவது போர்நிறுத்த உடன்பாடு மோசமான நிலையை அடைந்து அரசு வன்னி மீது விதித்திருக்கும் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடைகள் இக்காரணங்களினால் வீடுகளைத் திருத்தியமைக்கும் பணிகள் இழுபறி நிலையில் உள்ளன.

முல்லைத்தீவில் இடம்பெற்றுவரும் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளுக்குரிய கட்டடப்பொருள்கள் பெருமளில் தென்னிலங்கையில் இருந்தே கொண்டுவரப்பட்டன. தற்போது அப்பொருள்களை விரைவாக எடுத்துவர வவுனியாவில் இராணுவம் பல தடைகளை ஏற்படுத்துகின்றது.

இந்த நிலையில் நீண்டகாலம் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் இருக்கமுடியாத மக்கள் தமது காணிகளில் குடிசைகள் அமைக்கும் பணியில் இறங்கியுள்ளனர்.

### விமானத் தாக்குதலால் முகாமை விட்டு வெளியேறும் மக்கள்

கடந்த ஜூன் மாதத்தில் முல்லைத்தீவு செல்வபுரத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா அரசின் வான் படையின் தாக்குதல்களினால் அச்சம் கொண்ட மக்கள் இடைத்தங்கல் முகாம்களை விட்டு வெளியேறி தமது காணிகளில் குடியேறி வருகின்றனர்.

ஆழிப்பேரலை ஏற்பட்ட காலத்தில் நிரந்தர வீடுகள் அமைப்போம். பொதுக்கட்டடங்களுக்கு காணி ஒதுக்கி கட்டடம் அமைப்போம் என வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

உதாரணமாக ஆழிப்பேரலையால் முற்றாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மகாவித்தியாலயம் பிற காணி ஒதுக்காத காரணத்தால் தனது பழைய இடத்தில் 900 மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

## ஆழிப்பேரலை பாதித்தோருக்கான அபிவிருத்திகள் பொருளாதாரத் தடையினால் பெரிதும் பாதிப்பு

காணி கிடைக்கும் என்று எதிர்பார்த்து காலத்தைக் கழிப்பதைவிட எமது அழிவடைந்த பாடசாலையில் மீண்டும் பாடசாலையை இயக்குவது நல்லது - என்றார் முல்லைத்தீவு மகாவித்தியால அதிபர் அல்பிறட்.

இப்பாடசாலை போன்றே பல திணைக்களங்கள் காணி ஒதுக்கப்படாததினால் நிரந்தரக் கட்டடம் அமைக்க முடியாத நிலையில் உள்ளன.

### காணி ஒதுக்கீடு செய்தால் பாடசாலைக்குக் கட்டடம்

முல்லைத்தீவு அரச செயலகம் காணி ஒதுக்கித்தருமாயின் புதிய வலய கல்விப் பணிமனைக் கட்டடம் அமைத்து தருவதற்கு



நிக்கொட் தயாராகவுள்ளது என்கிறார் முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரட்ணம்.

இவையெல்லாவற்றையும் விட முக்கியமான பிரச்சினை முல்லைத்தீவில் கடற்றொழிலார்கள் தற்போது எதிர்கொள்ளும் நெருக்கடிகளாகும்.

**கி.மைதினி**

ஆழிப்பேரலைக்கு முன்னர் 3 ஆயிரம் வரையான மீன்பிடிப்படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டன. தற்போது ஆயிரம் வரையான படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள நிலையிலும் பிடிபடும் மீன்களை கொழும்புக்கு கொண்டுசெல்ல 'கூலர்கள்' போதியளவு இல்லை. மூன்று வரையான கூலர்கள் பணியில்உள்ளன.

நெருக்கடிகளுக்கு மத்தியில் பிடிக்கப்படும் மீன்களை கூலர்கள் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லும்போது ஓமந்தையில் அவை இறக்கி ஏற்றப்படுகின்றன. இதன் போது இவை பழுதடைகின்றன அந்த நிலையில் கொண்டு செல்லப்படுகின்றன - என்றார் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் அ.மரியராசா.

எனவே, முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளில் குடியேறி தொழில்முயற்சிகளில் ஈடுபட வழி எப்போது பிறக்கும் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் இடைத்தங்கல் முகாம் வாழ்வு ஒழிய எல்லோரும் பாடுபடுவோம்.-

# நல்லவருக்குச் செய்யும் உதவி



ஒரு கிராமத்தில் கண்ணபிரான் என்னும் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த உழைப்பாளி.

தான் உழைக்கும் பணத்திற்கு வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொள்வதில்லை. அவ்வப்போது கிடைக்கும் பணத்தைக் கொண்டு வீட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வான்.

தன்னிடம் கடன் கேட்டு வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாது உதவும் மனப்பாங்கு உடையவன்.

அன்று விறகு வெட்டும் வேலப்பன் அவசரமாக வந்து "ஐயா என் குழந்தைக்கு கடுமையான நோய். வைத்தியரிடம் காட்டுவதற்கு பணம் இல்லை. பணம் இருந்தால் கொடுத்து உதவுங்கள்" என்று இரக்கமாகக் கேட்டான்.

கண்ணபிரான் 'இந்தா பணம் விரைவாக குழந்தைக்கு வைத்தியம் செய் என்று' தன்னிடம் உள்ள பணத்தைக் கொடுத்து அனுப்பினான்.

காலங்கள் உருண்டோடின வறுமையின் கொடுமையும், மூப்பின் தளர்ச்சியும் கண்ணபிரானை உருமாறச் செய்து விட்டன.

வெயில் நேரம் தாகத்துக்கு நீர் கிடைக்காதா? என தேடியவாறு கண்ணபிரான் வீதியால் சென்றான். அவ்வேளை, "ஐயா கண்ணபிரான் என்னைத் தெரியவில்லையா?" நான்தான் விறகு வெட்டி வேலப்பன் அன்று நீங்கள் செய்த சிறு உதவியால் என் மகன் உயிர் பிழைத்தான். நான் இன்று பணக்காரனாய் வாழ்கிறேன். இந்தப் பணத்தை அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என பெருந்தொகைப் பணத்தைப் பணிவுடன் கொடுத்தான்.

"நான் செய்த சிறு உதவிக்கு இவ்வளவு பணமா வேண்டாம்" என பெரியவர் மறுத்தார்.

"தக்க சமயத்தில் நீங்கள் உதவியதுக்கு நான் செய்யும் சிறு உபகாரம். இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக்கொண்டான் வேலப்பன்.

வேலப்பனின் பெருந்தன்மையை நினைத்து பெரியவர் புளகாங்கிதம் அடைந்தார்.

'நல்லவர்களுக்கு செய்த உதவி கல்வெட்டு போல நிலைத்துப் பயன் தரும்'.

- அப்பம்மா




## அறிந்து கொள்வோம்

- ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற நகரம் எது?
  **அலிஸ் ஸ்பிரிங்ஸ்**
- மெக்ஸிக்கோ நகரில் உள்ள பிரதான மலைத் தொடரின் பெயர் என்ன?
  **சிராமாட்ரி**
- கடற்கரைகள் இல்லாத தென்னாபிரிக்க நாடுகள் எவை?
  **பொலிவியா, பரகுவே**
- உலகில் மக்களாட்சிக்காக போராடிய அமெரிக்க ஜனாதிபதி யார்?
  **வுட்ரோ வில்ஸன்**
- ஐக்கிய அமெரிக்க சுதந்திர சாசனத்தை உருவக்கியவர் யார்?
  **தோமஸ் ஜெஃபர்ஸன்**
- பாகிஸ்தானின் பிரதான துறைமுகம் எது?
  **கராச்சி**
- பாகிஸ்தானையும் ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் கணவாய் எது?
  **கைபர் கணவாய்**




## சிரியுங்களேன்.....!

மகன்: அம்மா! ரீச்சருக்கு முட்டை என்றால் பிடிக்கும்.



தாய்: வீட்டுக்கு நிறைய முட்டை வாங்கிக் கொண்டு போறாவா?

மகன்: இல்லை எனக்கு எல்லாப் பாடத்துக்கும் இரண்டு, இரண்டு [illegible]

## உங்களுக்குத் தெரியுமா?

- சிறுவர் சிறுமியருக்கு உடலில் 300 எலும்புகளும் பெரியவர்களுக்கு 206 எலும்புகளும் உள்ளன. விநோதமாக இருக்கிறதா? பிள்ளைகள் வளர வளர சில எலும்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்துவிடுவதே இதற்குக் காரணம்.
- மனித உடம்பில் நீண்ட நாள்கள் உயிருடன் இருந்து இயங்கக் கூடிய செல்கள் மனித மூளையில் உள்ள செல்களே. அவை ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதும் சிறப்பாகச் செயற்படக்கூடும்.
- ஒரு வருடத்தில் ஒரு மனிதன் சராசரியாக 4, 200, 000 முறை தன் கண்களை இமைக்கின்றான்.
- பாலைவன வெட்டுக்கிளிகளின் வகையான ஸ்கிஸ்டோஸிர்ஸா கிரகிரியா ஒரு பெரும் எண்ணிக்கையானவை சாரையாக வந்தால் 20,000 தொன் உணவுப் பொருள்களை ஒரே நாளில் தின்று தீர்த்துவிடக்கூடியவை.
- ஸ்டிகோசாரூஸ் எனப்படும் டைனோசர்கள் 30 அடி உயரம் வளர்பவை! ஆனால், அவைகளின் மூளை ஒரு வேர்க்கடலை அளவு மட்டுமே இருக்கும்.
- நம் வீட்டில் பறந்து சுற்றித்திரியும் சாதாரண ஈ தான் உலகிலேயே மிகவும் ஆபத்தான பூச்சி! ஈக்கள் விலங்குகளின் சாணத்திலும் கழிவுகளிலும் அடிக்கடி தொடர்ந்து அமரும் பழக்கம் கொண்டிருப்பதால் மற்ற எல்லா வகைப் பூச்சிகளைக் காட்டிலும் ஈக்கள் மூலமே நோய்கள் அதிகம் பரவுகின்றன.

*தொகுப்பு:*
ஸ்ரீபன் கிறிஸ்ரீன் சுஜானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் முதலாவது சர்வதேசப் பாடசாலை

தற்போது ஏற்பட்டுள்ள ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டதே மானிப்பாயில் உள்ள கியூமெடிக்கா சர்வதேசப் பாடசாலையாகும்.

கியூமெடிக்கா என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது சர்வதேசப் பாடசாலை இதுவாகும்.

கியூமெடிக்கா என்ற சர்வதேச உதவி வழங்கும் நிறுவனம் இலங்கையில் தற்போது செயற்பட்டுவருகின்றது. இலங்கையின் அபிவிருத்திக்கும், கல்வி வளர்ச்சிக்கும், பல்வேறு சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கும் அது தனது உதவியை வழங்கி வருகின்றது.

குறிப்பாக வடக்கு- கிழக்குப் பகுதிகளில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கான பல்வேறு உதவிகளைக் கியூமெடிக்கா செய்து வருகின்றது. அதிலும் குறிப்பாக குடாநாட்டில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரக் கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு கியூமெடிக்கா மீன்பிடிப்படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனத்தின் மற்றுமொரு செயற்பாடே மானிப்பாயில் சங்கரப்பிள்ளை வீதியில் இயங்கிவரும் சர்வ தேசப் பாடசாலையாகும்.

யாழ்.குடாநாட்டில் உள்ள மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்குடனேயே இது அமைக்கப்பட்டுள்ளது. யாழ்.மக்களைப் பொறுத்தமட்டில் இது பெரும் வரப்பிரசாதமாகக் கருதப்படுகின்றது.

சர்வதேசப் பாடசாலைக்குரிய சகல வசதிகளுடனும் இயங்கும் இப்பாடசாலையில் தற்பொழுது பாலர் வகுப்பு முதல் 8 ஆம் தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்விபயின்று வருகின்றனர். 22 ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். தனியாக ஆங்கில மொழி மூலம் மட்டுமே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கொழும்பில் உள்ள சர்வதேசப் பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் பாடத்திட்டங்களுக்கு அமைவாகவே இங்கும் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. லண்டன் பாடசாலைகளில் நடைபெறும் பரீட்சைகளில் தோற்றுவதற்கு இந்தப் பாடத்திட்டங்கள் வழிவகுக்கின்றன.

இப் பாடசாலையில் கல்வி பயில்வதன் மூலம் மாணவர்கள் தமது கல்வியின் தரத்தை சர்வ தேச அளவில் உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன.

-அதிரன்.


இருமல்........ இருமல்........
எங்கும் இருமல்

இருமல், தடிமல், மூச்சுத் திணரல்,
(மூச்சு விட கஷ்டப்படுதல்)
மற்றும் எல்லாவிதமான.........

சித்தாலேப
இருமல் அரிஷ்ட






சித்தாலேப

சித்தாலேபயின்
இன்னுமொரு தயாரிப்பு

வட புல விநியோகஸ்தர்:-
வனிக்கா மெடிக்கல்ஸ்
85, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0212226291
தொலைநகல்:- 0212222445
மின்னஞ்சல்:- vanikaa@sltnet.lk

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட். 33/3, ஸ்ரீ தர்மராம றோட், இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465



100% VEGETABLE PROTEIN

**புதிய புரோட்டினெக்ஸின் அநுகூலங்கள்**

நீங்களும் உங்கள் குடும்பமும் ஏனைய போஷாக்குப் பானங்களை விட புதிய புரோட்டினெக்ஸ் இனை ஏன் தெரிவு செய்ய வேண்டும் புதிய புரோட்டினெக்ஸ் ஆனது சோயா புரதம் ஐசோலேட் இனை ஆதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச் சிறந்த முறையில் சுதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச் சிறந்த முறையில் சுகாத்திகரிக்கப்பட்ட தாவரப் புரதம். மேலும் சோயா புரதம் ஐசோலேட் ஆனது 90% இற்கும் அதிகமான புரதத்தைக் கொண்டதுடன் புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஏனைய பாற்பொருட்களைப் போலன்றி கொலஸ்ரோல் அற்ற, கொலஸ்ரோலைக் குறைப்பதற்கு உதவக்கூடிய, 72 கிராம் புரதம், பீற்றா கரோட்டீன், 13 விற்றமின்கள், 11 கனியுப்புக்கள், 2 கிராம் இற்கு குறைவான கொழுப்பு என்பவற்றைக் கொண்டதுடன் முக்கியமாக Isoflavones இனையும் கொண்டுள்ளது.

புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஆரோக்கியமான சுகவாழ்விற்கு அவசியமான 22 அமினோ அமிலங்களைக் கொண்ட ஒரேயொரு தாவரப்புரதம் என்பது மட்டுமன்றி ஏனைய அநுகூலங்களையும் கொண்டுள்ளது.

**Isoflavones என்பவை யாவை ?**

இவை தாவரங்களில் காணப்படும் (phytochemical) என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒட்சியேற்றத்திற்கு எதிராகச் செயற்படக்கூடிய தன்மையைக் கொண்டவை. அன்டி ஒக்ஸிடன்ட் (Antioxident) என்பவை சூழல்மாசு, சூரிய ஒளி, மற்றும் எமது உடல் செயற்பாட்டால் ஏற்படும் கலச் சேதத்தினை தடுக்க அல்லது மீள் உருவாக்க வல்லவை. மேற்குறிப்பிட்ட காரணிகளால் உடலில் ஒட்சியேற்றம் ஏற்படுவதால் அபாயகரமான இரசாயனப் பதார்த்தங்கள் (free radical) உருவாகின்றன. இவை அதிக தாக்குதிறன் கொண்டதால் DNA யினை சேதப்படுத்தி கல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதுவே புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணமாகும். இவ் இரசாயனப் பதார்த்தங்கள் உடலின் நோயெதிர்ப்புத் தன்மையை செயலிழக்க வல்லது. மேலும் இவை முதுமையடைதலின் போது ஏற்படும் மாற்றங்களுக்கும் காரணமாக விளங்குகின்றது.

புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது free radical உருவாகும் இரசாயனத் தாக்கத்தினை தடுப்பதுடன், உருவாகி உள்ளவற்றையும் அழிக்கவல்லது.

**புதிய புரோட்டினெக்ஸ் இன் மூலம் உடல் ஆரோக்கியத்திற்கான அநுகூலங்கள் யாவை ?**

1 இழைய மற்றும் தசை வளர்ச்சி - சோயாப்புரதம் ஆனது குளுட்மின், ஆர்ஜனின், லைசின் மற்றும் கிளை- சங்கிலி அமினோ அமிலங்கள் அடங்கலாக பல அமினோ அமிலங்களையும், விலங்குப் புரதத்திலனையும் விட அதிகளவில் கொண்டிருப்பதால் இழைய வளர்ச்சிக்கு உன்னதமானது. ஆர்ஜனின் ஆனது தசை விருத்திக்கு மிக முக்கியமானதுடன் மேம்படுத்தப்பட்ட நோயெதிர்ப்புத் தன்மைக்கும் உதவுகின்றது.

2. பீற்றா கரோட்டின் அநுகூலங்கள்- புரோட்டினெக்ஸ் பீற்றா கரோட்டினைக் கொண்டுள்ளது. இதன் முக்கிய அநுகூலம் அன்டி ஒக்சிடென்ட் (Antioxidant) ஆகத் தொழிற்படுவது. இது விற்றமின் A,E யினைப் போன்று நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யக்கூடியது. இது free radical இனை நடுநிலையாக்குவதன் மூலம் கலங்களைப் பாதுகாக்கவல்லது. Free radical ஆனது ஒட்சியேற்றம் என்னும் செயற்பாட்டின் மூலம் உடலைத் தாக்கவல்லது. இச் செயற்பாட்டை பீற்றா கரோட்டின் தடுப்பதன் மூலம் நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யும். ஆய்வுகளின்படி பீற்றா கரோட்டின் ஆனது புற்றுநோயைத் தடுக்கவல்லது. விற்றமின் A யானது நுரையீரல் இழையத்திற்கு போஷணையை வழங்குவதன் மூலம் புற்றுநோயை தடுக்கவல்லதுடன் தொற்று நோயிலிருந்தும் பாதுகாக்கும். பீற்றா கரோட்டினானது கொலஸ்ரோலின் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் நாடிகளில் கொலஸ்ரோல் படிவதைத் தடுக்கின்றது. அத்துடன் பீற்றா கரோட்டினானது உடலிலுள்ள T-கலங்கள் இனை வலிமையாக்குவதன் மூலம் HIV தாக்கத்தை கட்டுப்படுத்துகிறது.

3. இருதய நோய் அபாயத்தை குறைக்கின்றது - புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது LDL இனை குறைப்பதினாலும் இரத்தம் உறைதலை குறைப்பதனாலும் மாரடைப்பு மற்றும் பாரிசவாத அபாயத்தைக் குறைக்கின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 25 கிராம் சோயாப்புரதம் 9 வாரங்களுக்கு உட்கொள்வதன் மூலம் சராசரி 5% LDL குறைவடைகின்றது. மேலும் அதிகளவு LDL உள்ளவர்களில் 11% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. (ஒவ்வொரு 10% முதல் 15% LDL வீழ்ச்சிக்கும் 20% முதல் 25% வரை மாரடைப்பு அபாயம் குறைவடைகின்றது).

99ம் ஆண்டு FDA என்னும் அமைப்பு அநுமதியளித்ததன்படி கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் குறைவான உணவிற்கு மேலதிகமாக 25 கிராம் isoflavones அடங்கிய சோயாப்புரதத்தினை உட்கொள்வதால் மாரடைப்பு அபாயத்தினை குறைக்கின்றது.

4. புற்று நோய்க்கெதிரான பாதுகாப்பு - புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது மார்பகப் புற்றுநோய் கருப்பைப் புற்றுநோய், முன்னிலைச்சுரப்பி புற்றுநோய் போன்ற ஹோர்மோன் சம்பந்தப்பட்ட புற்றுநோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்கின்றது. Isoflavones ஆனது புற்றுநோய்க்கெதிரான மருந்துகள் செயற்படும் அதே முறையில் செயற்படுகின்றது. சனத்தொகையை ஆதாரமாகக் கொண்ட ஆய்வுகளின்படி உட்கொள்ளப்படும் isoflavones ற்கும் மார்பகப்புற்றுநோய் மற்றும் கருப்பைப் புற்றுநோய் அபாயம் குறைவடைவதற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. சோயாபுரதம் மற்றும் isoflavones செறிவான ஏனைய உணவுகளை உட்கொள்ளும் பெண்களில் கருப்பைப் புற்றுநோய் அபாயம் 54% குறைவடைகின்றது.

5. ஒஸ்டியோபொரோஸிஸ் இற்கு எதிரான பாதுகாப்பு- புரோட்டினெக்ஸிலுள்ள (Soy Protein Isolate) ஆனது உடலில் கல்சியத்தை தக்க வைத்துக் கொள்ளும் தன்மையையும், எலும்புகள் கல்சியத்தை உள்ளெடுக்கும் தன்மையையும் மேம்படுத்துகின்றது. அத்துடன் isoflavones ஆனது எலும்பு இழப்பு, எலும்பு முறிவு போன்றவற்றை கட்டுப்படுத்தி ஒஸ்டியோபொரோஸிஸ் ஏற்படுவதை தடுக்க உதவுகின்றது. அத்துடன் isoflavones புதிய எலும்புகள் உருவாகுவதற்கு உதவுவதற்கான சான்றுகளும் உள்ளன. ஆய்வுகளின்படி நாளொன்றுக்கு 40g சோயா புரதம் உட்கொள்ளும் மாதவிடாய் நிரந்தரமாக நின்றுபோன (இறுதி மாதவிடாயின்பின்) பெண்களின் முதுகெலும்பு கனியுப்பு அடர்த்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதுவே ஒஸ்டியோபொரோஸிஸில் கூடுதலாக பாதிக்கப்படும் எலும்பு.

6. இறுதி மாதவிடாயின் பின்பும் அதற்கு முன்பும் ஏற்படும்- அறிகுறிகளைக் கட்டுப்படுத்துகின்றது. புரோட்டினெக்ஸிலுள்ள isoflavones ஆனது உடலின் ஈஸ்ரஜன் குறைவடையும் அல்லது மாறுபடும் சந்தர்ப்பங்களில் அதனைக் கட்டுப்படுத்த உதவுவதன் மூலம் இறுதி மாதவிடாய் (நிரந்தரமாக நின்றுபோன) மற்றும் அதற்கு முன்பான அறிகுறிகளைக் குறைக்க உதவுகின்றது.

7. முன்னிலைச் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கெதிராகச் செயற்படுகின்றது- புரோட்டினெக்ஸ் போன்ற சோயா செறிந்த உணவுகளை உட்கொள்வதால் ஆண்களில் முன்னிலைச்சுரப்பி பெரிதாவது தடுக்கப்படுகின்றது. ஆண்களில் வயது முதிரும் போது முன்னிலைச்சுரப்பியும் பருமனில் பெரிதாவதால் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிக்கும் போதுசிரமம் போன்றவை ஏற்படக்கூடும்.

8. Endometriosis இற்கு எதிராகச் செயற்படுகின்றது- Endometriosis என்பது அசாதாரணமாக கருப்பைச் சுவர் வெளிப்புறமாக தடிப்படையும் செயற்பாடு. இதன்போது வயிற்றில் வலி ஏற்படும். புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது ஈஸ்ரஜனின் தொழிற்பாட்டை மேம்படுத்துகிறது.

New

Powder
PROTINEX®
புரோட்டினெக்ஸ்®
நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது

சிறப்பு அங்காடிகள், கடைகள் மற்றும் அனைத்து பாமசிகளில் இப்போது பெற்றுக் கொள்ளலாம்.

வனிலா







Great new taste

சொக்லட்

மேலதிக சீனி சேர்க்கப்படவில்லை.

CHOLESTEROL FREE LACTOSE FREE 14 VITAMINS 11 MINERALS


Manufactured by:
Astron 1956 - 2006 Fifty Years of Commitment to Healthcare Solutions
Astron Limited., 688, Galle Road, Ratmalana, Sri Lanka. Tel: 2636741, 5566741 Fax: 2636173 E-mail: astron@astron.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தமிழர் வரலாற்றின் தனிச்சொத்து; பூர்வீகச் சான்றுகள் உணர்த்தும் உண்மை இது!

யாழ்ப்பாணமே நல்லூர் திருவிழாவால் களைகட்டிவிடும். எந்தப் பிரதேசத்திருந்தும் பக்தர்கள் நல்லூர் கந்தசுவாமியைத் தரிசிக்க வருவார்கள். நல்லூர் பிராந்தியம் காலாதி காலமாக யாழ்.மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற ஒன்றாக விளங்கிவந்துள்ளது. இதற்கு நல்லூர் ஓர் அரசின் தலைநகராக விளங்கியமை முக்கிய காரணம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் பற்றிப் போர்த்துக்கேயரின் நூல்களில் பலவாறு



நல்லூர் ஆலயத்தின் பழைய தோற்றம் — நல்லூர் ஆலயத்தின் புதிய தோற்றம்

குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லூர்க்கந்தன் ஆலயம் யாழ்ப்பாணத்திலேயே பெரிய கோயிலாக விளங்கியதையும், இவ்வாலயத்தைச் சுற்றி நெடுமதில்கள் காணப்பட்டிருந்ததையும் குவைறோஸ் சுவாமிகள் எனும் வெளிநாட்டவர் கூறியுள்ளார். ஆனால், அந்த பண்டைய ஆலயம் அந்நியரால் அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் யாழ்.மக்களால் பின்னர் புதிதாக கந்தசாமி கோயில் அமைக்கப்பட்டுச் சிறப்பாக வழிபாடாற்றப்பட்டு வருகின்றது.

### மந்திரிமனையும் யமுனா ஏரியும்

நல்லூர் அரசிலே சிறப்புற்றிருந்த பல கட்டடங்கள் இன்று காணாமற் போய்விட்டன. நல்லூரில் இன்று ஒரு சில தொல்லியற் சின்னங்களே எஞ்சியுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயம். அந்நியரின் படையெடுப்பு, அழிப்பு நடவடிக்கை, சூறையாடல் என்பவற்றால் நல்லூர் அரசின் பல கட்டடங்கள் அழிந்து போயின. எஞ்சிய சின்னங்களும் தமிழ் மக்களின் அக்கறையற்ற போக்கால் பாதுகாக்கப்படாது மேலும் அழிந்து மறைந்து கொண்டிருக்கின்றன. நல்லூர் அரசின் மந்திரிமனை, யமுனாஏரி போன்றவை இன்று சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. மக்கள் அதன் வரலாற்றுச் சிறப்பை உணரவேண்டும்.

## மந்திரிமனையும், யமுனா ஏரியும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டியவை

சட்டநாதர் கோயிலுக்குச் சற்றுத் தெற்காக நல்லூரின் பாரம்பரிய வரலாற்றைப் பறைசாற்றும் வகையில் கம்பீரமான முகப்புத் தோற்றத்துடன் மந்திரிமனை அமைந்துள்ளது.

இக்கட்டடத்தின் அமைப்பும் மரத்தாலான சிற்ப வேலைப்பாடுகளும் நூதனமான கலைப்பண்பை வெளிப்படுத்துகின்றன. இதன்பொதுவான வெளித்தோற்றமும் கலை மரபும் ஒல்லாந்தரை நினைவுபடுத்தினாலும் நுணுக்கமாக ஆராய்ந்தால் சுதேசக் கலை மரபும் கலந்திருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

### சுரங்கப்பாதை

இங்கு பழைமையான கிணறு ஒன்று உள்ளது. அதன் ஒரு பகுதி மந்திரிமனைக்கு உள்ளேயும், மறுபகுதி வெளியேயும் அமைந்துள்ளது. இக்கிணற்றிற்கும் யாழ்.அரசர்கால யமுனா ஏரிக்கும் இடையில் சுரங்கப்பாதை இருந்துள்ளது. இது தற்போது, அடைக்கப்பட்டுக் காணப்படுகிறது. மந்திரிமனையின் பின்புறத்தில் நிலஅறையொன்றும் அதற்கு மேல் மூடுசாந்தினால் அமைக்கப்பட்ட மண்டபமும் இருந்ததாகத் தெரிகிறது. தற்போது இவை இடிந்த நிலையில் மூடுண்டு போயுள்ளன.


தமிழரின் தொழில்நுட்பத்திறனைக் காட்டும் யமுனா ஏரி இன்று பற்றைக்காடுகள் சூழக் காணப்படுகிறது. இந்த ஏரி பொழிந்த முருகைக்கற்களையும், வெள்ளைக் கற்களையும் கொண்டு 'ப' வடிவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வேரியில் அரசர்கள் தமது பாதுகாப்புக் கருதி சுரங்கங்கள் அமைத்ததாகக் கூறப்படுகிறது.

யமுனா ஏரியைச் சுற்றிச் சில கட்டடத் தொகுதிகள் இருந்திருக்கலாம் என்பதை இங்குள்ள பழைமையான ஓடுகள், மட்பாண்டங்கள், செங்கட்டிகள், கலைவேலைப்பாடுடைய சுண்ணாம்பு சாந்தினால் ஆன தூண்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

### அக்கறையற்ற போக்கு

நல்லூர் அரசின் சிறப்பை இன்றுவரை ஞாபகப்படுத்தும் இச்சின்னங்களெல்லாம், தமிழரின் அக்கறையற்ற போக்கால் இல்லாது

சங்கிலிய மன்னனின் மந்திரிமனை



போய்விடும் அபாயம் உள்ளது. இன்று இவற்றை அக்கறையுடன் பராமரிக்காது போனால் பின்வரும் தலைமுறையினர் நூல்கள் மூலமே அவ்வாறான சின்னங்களை அறிய வேண்டிவரும். அவர்களால் அச்சின்னங்களைக் காணமுடியாது போய்விடும்.

**சியாமளா இலட்சுமணன்**
சங்குவேலி.

பிற்காலச் சந்ததியினர் தமிழரது அரசுச் சிறப்பை, தொழில்நுட்பத்திறனை அறிய முடியாது போகும். இவ்வாறு பிற்காலத்தவர் அறியமுடியாதவாறு பழம்பெருமை வாய்ந்த சின்னங்களைப் பாதுகாக்காது அழிய விடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும். தமிழ்ச் சமூகமே தமிழரின் தனித்துவத்தைக் காட்டும் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது முக்கிய கடமையாகும். ✱

# கிராமமட்டத்திலான பிணக்குகளைத் தீர்த்துவைக்க கைகொடுக்கும் பிரதேசமட்ட மத்தியஸ்தர் சபைகள்

*யாழ்.மாவட்டத்திலுள்ள அனேகமான பிரதேச செயலர் பிரிவுகளில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்டு பயிற்றப்பட்ட மத்தியஸ்தர்கள் மூலம் பெரும்பாலான பிரச்சினைகள் சமரசப்பேச்சு ஊடாக உடன்பாட்டை அடைகின்றன. இத்தகைய சபைகளின் தோற்றம், இயக்கம் குறித்து விளக்குகின்றது இந்தக் கட்டுரை.*

நாடளாவிய ரீதியில் இன்று சிவில் வழக்குகள், கிரிமினல் வழக்குகள் மற்றும் மணநீக்க வழக்குகள் என நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந்துள்ளன; குவிந்தும் வருகின்றன. இந்த வழக்குகளை உரிய காலத்தில் முடிவுறுத்துவதற்கு- அதனை முடிவுக்கு கொண்டுவந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போதுமான சட்டத்தரணிகள் மற்றும் அதற்கான ஆளணிகள் என்பன மிகவும் பற்றாக்குறையாகவே உள்ளன என பொதுவாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கிராமிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் எழும் சகல பிரச்சினைகளையும் நீதிமன்றம் ஊடாகத் தீர்க்க முடியாது. இவ்வாறான பிரச்சினைகளை நீதிமன்றம் ஊடாகத் தீர்ப்பதாயின், பெருமளவிலான பணச் செலவினையும் நேர விரயத்தினையும் எதிர்கொள்ளநேரிடும்.

இந் நிலையில் நீதியமைச்சின் மூலம் 1980 ஆம் ஆண்டுகளில், மத்தியஸ்தர் சபைகளை உருவாக்கி செயற்படுத்துவதன் மூலம் பிணக்குகளையும், தவறுகளையும் சமரசம் ஊடாக இணக்கத்தினை ஏற்படுத்தலாம் என அரசு நினைத்தது.

இதன் பயனாக, பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நாடாளுமன்றம் 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்தர் சபைகள் சட்டம் மூலம் (1988 டிசெம்பர் 23 வர்த்தமானி பத்திரிகை) உருவாக்கப்பட்டு செயலுருப் பெற்றது.

மனிதன் பகுத்தறிவுள்ள பிராணி. எந்த விடயத்தையும் மிகவும் ஆழமாகவும், நிதானமாகவும் சிந்தித்தே செயலாற்றுவான். இவ்வாறான ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சூழலுக்கு ஏற்ப தப்பி வாழ நினைக்கின்ற வேளையில் சிலநேரங்களில் தன்னையறியாமலே பிணக்குகளும் தவறுகளும் வந்து ஆட்கொண்டு விடுகின்றன. இதனால், பல பிரச்சினைகளுக்கும், கொலைகளுக்கும் மனிதன் தீர்வின்றி சாகடிக்கப்படுகின்றான்.

### அடிக்கடி பிணக்குகளுக்கு முகம் கொடுக்கும் நிலை

இவ்வாறான பிரச்சினைகள் சமரசம் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டியவை. தீர்க்கப்படவேண்டியவை; பிணக்குகள், தவறுகள் அற்ற வாழ்க்கை மிகவும் அதிர்ஷ்டவசமானது. துரதிர்ஷ்டவசமாக சில வேளைகளில் எமது சொந்தக் குடும்பங்களுக்குள்ளும், முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது.

## ஊர்ப்பிரதிநிதிகளைப் பயன்படுத்தி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சி



*மூவர் கொண்ட மத்தியஸ்தர் குழு, இரு கட்சிக்காரர்களது பிரச்சினைகளையும் ஆராய்ந்த காட்சி இது.*

இன்று நாம் ஏனைய துறைகளில் பாரிய முன்னேற்றங்களையும் - வளர்ச்சிகளையும் எய்துகையில் வாழ்க்கையின் சவால்கள் காரணமாக எமக்குள்ளேயே சமாதானத்தை காணத்தவறுகின்றோம். சில பிணக்குகள் மிக சாதாரணமானவை; சில பாரதூரமானவை. பல சந்தர்ப்பங்களில் பிணக்குகள் சிறிய பிரச்சினைகளினால் ஆரம்பிக்கின்றன. ஆரம்ப கட்டத்தில் இவை தீர்வு பெறாதபோது சந்தேகம், பிழையாக விளங்கிக் கொள்ளல் மற்றும் தவறான கண்ணோட்டம் ஆகியன, சிறிய பிரச்சினைகள் தவறுகளை - பாரதூர மாக்குகின்றன.

இதன் விளைவாக வெறுப்பும், நம்பிக்கையீனமும், சுமூகமின்மையும் ஏற்பட்டும். பிணக்குகள் பெருமளவில் உடலூறுக்கும், உளத்தாக்கத்திற்கும் சில சமயங்களில் துன்பகரமான, பரிதாபகரமான மரணத்திற்கும் இட்டுச்செல்லும். இத்தகைய முடிவுகளை நாம் அனுமதிப்பது வருந்தத்தக்கது. அத்தகைய பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கும், அதனால் ஏற்படக்கூடிய பயங்கரமான முடிவால் வருந்துதலைத் தவிர்ப்பதற்கும் நீதியமைச்சு மத்தியஸ்தர் சபை மூலம் உதவியளிக்க முனைகிறது.

மூவின மக்களும் முரண்பாடு, தீங்கு, சுமூகமின்மை, வெறுப்பு என்பனவற்றிலிருந்து விடுபட்ட சமாதான வாழ்க்கையை வாழ்வதற்கு உதவுதல் இன்று முக்கியதேவையாகவுள்ளது. மனிதன் சிந்தித்துச் செயலாற்றக் கூடிய தன்மை கொண்டவன். இதனால் ஒவ்வொரு மனிதர்களும் சிக்கலான ஆளுமை கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். இது மனிதத் தன்மையின் ஒரு பாகமாகும். பல சந்தர்ப்பங்களில் நாமே சாதாரண பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வுகளைக்காண இயலாதுள்ளோம்.

எவ்வாறாயினும் பல சந்தர்ப்பங்களில் இவை பிணக்கில் சம்பந்தப்படாத மூன்றாம் தரப்பு நிலையில் உள்ள ஒருவரின் உதவியுடன் இலகுவாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன. உண்மையான பிரச்சினையை மெய் ரீதியாகவும், உணர்வு பூர்வமாகவும் விளக்கிக் கொள்வதற்கும் எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வினைக் காண்பதற்கும் பிணக்குகள், பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு உதவக்கூடிய மத்தியஸ்தம் என்ற செயன்முறை கோட்பாடு கையாளப்படுகின்றது.

### வடக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் பூரண திருப்தியளிக்கும் சேவை

இலங்கை மத்தியஸ்தர் வரலாற்றில் (வடக்கு மாகாணம் தவிர்ந்த) அண்மைக் காலத்தில் செய்யப்பட்ட ஆய்வொன்றின் மூலம் மத்தியஸ்தர்கள் அதிக எண்ணிக்கையிலான பிணக்காளர்களுக்கு பூரண திருப்தி தரக்கூடிய வகையில் பிணக்குகளைத் தீர்த்ததாகவும், இச் சபைகளை நாடியோர் மத்தியஸ்தம் மூலம் மகிழ்ச்சி அடைந்ததையும் அறிய முடிகின்றது.

இலங்கையில், 1980ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து மத்தியஸ்தமானது செயற்பட்டுள்ளது. விசேட தொழில்நுட்பங்களையும் தேர்ச்சிகளையும் பயன்படுத்துகின்ற ஒரு விசேட செய்முறை மூலம் (முப்பரிமாண உளவளத்துணை மூலம்) பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கென வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய இடங்களிலும் கல்விமான்கள், இளைப்பாறிய அதிபர்கள், தற்போது அரச சேவையில் உள்ள அதிகாரிகள், சமூக ஆர்வலர், சமாதான நீதிவான்கள் ஆசிரியர்கள், சட்ட நுணுக்கம் தெரிந்த அதிகாரிகள் ஆகியோர் மத்தியஸ்தர்சபை உறுப்பினர்களாக நீதி அமைச்சின் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் விசேட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கிராம அலுவலரின் சிபார்சின் பெயரில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**செ.ரமேஷ் M.A.(Econ.)**

இந்த வகையில் இன்று 253 மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 9பிரதேச செயலர் பிரிவுகளில் தற்போது மத்தியஸ்தர் சபைகள் உரு வாக்கப்பட்டு மிகத் திறனான முறையில் இயங்கி வருகின்றன. இதன் மூலம் குடாநாட்டில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஆரோக்கியமான அழகிய
# புன்னகையின்
இரகசியம்

- நேர்த்தியான கூந்தல் வளர்ச்சி
- பளபளப்பான மேனி
- உறுதியான பற்களும், எலும்புகளும்

பயோட்டின், விற்றமின்-E
மற்றும்
கல்சியம்





அனைத்து பாமசிகளிலும் கிடைக்கும்

Once Daily
## Biotex-EC
## பயோடெக்ஸ் -EC

உலக சுகாதார அமைப்பின்
சிறந்த தயாரிப்பு செயன்முறைக்கான
அங்கீகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள்

For further information, please contact:
Star Pharma
96/2-13, Consistory Building,
Front Street, Colombo-11.
Tel/Fax: 4613110, 2452127
E-mail: starprm@wow.lk

Manufactured in India by:
THE MADRAS PHARMACEUTICALS
137-B, Old Mahabalipram Road,
Karapakkam, Chennai - 600 096.

## BIOTEX -EC என்றால் என்ன?

BIOTEX-EC என்பது
- பயோட்டின் (விற்றமின்-H) USP 300 mcg
- விற்றமின் - E USP 20 mg
- கல்சியம் பென்டதனேட் USP 12.5 mg

ஆகியவற்றை உள்ளடக்கிய (Capsules) மாத்திரை.

BIOTEX - EC ல் உள்ள **பயோட்டின்** மனித உடலை போஷாக்குடன் வைத்திருக்க மிகவும் அத்தியாவசியமானது இது உடலை போஷாக்காக வைத்திருப்பதுடன தலைமயிர் நேர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் வளர்வதற்கும், தலைமயிர் உதிர்வதை தடுப்பதற்கும் உதவுகிறது.

BIOTEX - EC ல் உள்ள **விற்றமின்** E சருமம் மற்றும் நகம் என்பவற்றை ஆரோக்கியமாகவும் பளபளப்பாகவும் வைத்திருப்பதுடன் வயது முதிர்ச்சியான தோற்றத்தை கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

BIOTEX - ECல் உள்ள **கல்சியம்** உடலின் உள்ள எலும்புகளையும் பற்களையும் வாழ்நாள் முழுவதும் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதுடன் ஒஸ்ரியோ புரோசிசை (Osteoporosis) தடுக்கிறது.

## BIOTEX-EC

- விரைவான தலைமயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- ஆரோக்கியமற்ற தலைமயிர்களுக்கு பலமூட்டுகிறது.
- தலைமயிர் உதிர்வதையும், உடைவதையும் தவிர்க்கிறது.
- தலை மயிர் மெல்வதை கட்டுப்படுத்துகிறது.
- தலைமயிர் நரைத்தலை தடுக்கிறது.
- தலைமயிர் வளர்ச்சியை ஊக்கப்படுத்துகிறது.
- பொடுகை (Dandruff) கட்டுபடுத்துகிறது.
- உலர்ந்த சருமத்தை செலுமையாக்குகிறது.
- வயது முதிர்ந்த தோற்றத்தை தவிர்க்கிறது.
- நகங்களை பளபளப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.
- எலும்புகளின் சக்தியையும் உறுதியையும் வாழ்நாள் முழுவதும் பேனுவதுடன் ஒஸ்ரியோ புரோசிசையும் (Osteoporosis) தடுக்கிறது.
- பற்களை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.

பாவனைமுறை: ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை மட்டும்.

உங்கள் ஆரோக்கியமான அழகிய புன்னகைக்கு
## பயோடெக்ஸ் -EC
யாழ் மக்கள் பெற்றுக்கொள்ள
VANIKAA MEDICALS
No. 85, Hospital Road, Jaffna.
Tel: 021- 2226291 Fax: 021- 2222445

# 15 ஆம் ஆண்டு நினைவு

## அமரர்
## V.M. கணபதிப்பிள்ளை
V.M.K. ஜுவெல்லர்ஸ்

பிறப்பு 23.04.1913
இறப்பு 31.07.1991



அன்போடு அறிவும் தந்து ஆற்றல் மிகு
பிள்ளைகளாய் பார் சிறக்க எம்மை எல்லாம்
பற்றோடு பேணி நின்று ஊர் போற்ற
எமக்கெல்லாம் உயர்வான வாழ்வளித்து
மகிழ்வாக நாம் வாழும் வேளைதனில்
காலனவன் இடையில்வந்து கவர்ந்து
சென்றான் உம் உயிரை
திசைமாறி திகிலாகித் தவித்து நின்ற எமக்கெல்லாம்
நிழலாகி நின்று வழி நடத்தும் எம் தந்தையே!
ஏழேழு பிறவிக்கும் எங்களுக்கே
தந்தையாய் மீள வரவேண்டி நிற்கும்...

டச்சு வீதி,
சாவகச்சேரி.
V.M.K. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐயாயிரம் வருடம் பழமை வாய்ந்த உலகத் தமிழினத்தின் முதல் வான்படை!

## பழ.நெடுமாறன் பெருமிதம்

சேலம்,ஓக.13

ஐயாயிரம் ஆண்டுகால உலகத் தமிழர் வரலாற்றில் முதற்தடையாக தமிழர்களுக்கே சொந்தமான வான்படையை செயலிலே இறங்கியிருக்கிறது தமிழீழம்.

இவ்வாறு பெருமிதம் வெளியிட்டிருக்கிறார் உலகத் தமிழர் பேரவைத் தலைவரும், தமிழ் தேசிய இயக்கத் தலைவருமான பழ. நெடுமாறன்.

நேற்றுமுன்தினம் பலாலி விமானத் தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியிருக்கின்றமை தொடர்பாக தமிழ் நாட்டில் கருத்து வெளியிட்டார் பழ.நெடுமாறன்.

உலகத் தமிழர் பேரமைப்பின் ஏற்பாட்டில் நேற்று சேலத்தில் நடந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

''பல்வேறு தடைகளைத் தாண்டி' உலகத் தமிழர் மாநாடு சேலத்தில் சனிக்கிழமை நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் வந்து குவிந்து கொண்டிருக்கும் தமிழர்கள், புலிகளின் வான்படையை முதன் முதலாக செயற்பட்டு இறங்கிய செய்தி கேட்டு மகிழ்ச்சியை கொண்டாடி மகிழ்கின்றனர். என்று பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

மாநாட்டில் பங்கேற்றியிருக்கும் மக்கள் மாத்திரமல்லாது உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களும் உற்சாகமடைந்திருக்கின்றனர். ஐயாயிரம் ஆண்டுகால தமிழர் வரலாற்றில் முதன் முதலாக தமிழர்களுக்கு சொந்தமான வான் புலிகள் படையை செயலில் இறக்கி எதிரிகளை மட்டுமல்ல எதிரிகளுக்கு உதவுகின்ற நாடுகளைக் கூட கலக்கியிருக்கின்ற இந்த சாதனையை புரிந்திருக்கின்ற தமிழீழ வான் படையினருக்கும் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் உலகத் தமிழ் பேரமைப்பு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது என்றும் - பழ. நெடுமாறன் கூறினார்.

## மொழித் தேர்ச்சிக்கான வாய்மொழிப்பரீட்சை

யாழ். மாவட்ட அரச திணைக்கள அலு வலகங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழி களில் தேர்ச்சிபெற்றுள்ள உத்தியோகத்தர் களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங் குவதற்கு வாய்மொழிமூலப் பரீட்சை நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இப்பரீட்சை நடத்தப்படும்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கான அனுமதி அட்டைகள் மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் வி.பொ.பாலசிங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (117)

# திமிர்த்தனம் பேசிய அரசுக்கு புலிகள் கொடுத்த தக்க பதிலடி

### இந்தியாவுக்கும் இது நல்ல பாடமென்கிறார் கொளத்தூர் மணி

இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காணுவோம் என்று திமிர்த்தனம் பேசிய சிங்கள அரசுக்கு விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல் தக்கதொரு பதிலடி. இதன் மூலம் இந்தியாவுக்கும் நல்ல பாடம் புகட்டப்பட்டிருக்கிறது.

- இவ்வறு தெரிவித்திருக்கிறார் பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி.

புலிகளின் வான்படைத் தாக்குதல் செய்தி கேட்டு தமது நெஞ்சமெல்லாம் பூரிக்கிறது என்றும் நேற்று தமிழகத்தில் மகிழ்ச்சி பொங்க கூறினார் கொளத்தூர் மணி. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் மீதான விமானத் தாக்குதலையும் பொறுத்துக் கொண்டு, நீண்ட பொறுமையை உடைத்துக்கொண்டு, சர்வதேச சமூகம் மற்றும் நோர்வேத் தரப்பினரை மதித்து மாவிலாறு நீர்த்தேக்கத்தை திறந்துவிட முன்வந்தும் இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காணுவோம் என்று திமிர்த்தனம் பேசிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதல் மூலம் சிங்கள இராணுவத்துக்கு ராடர் கருவிகளைக் கொடுத்தவர்களுக்கும் பயிற்சி அளித்த இந்தியாவுக்கும் நல்ல பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு சம்பளம் பெறுகின்ற இராணுவத்தினருக்கும் ஒரு நாட்டினது விடுதலைக்காகப் போராடுகின்ற போராளிக்குமான வித்தியாசத்தை உணர்ந்து இந்திய அரசு தனது நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒரு தமிழன் என்ற வகையில் - தமிழின உணர்வாளன் என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது வான் படைத் தாக்குதல் செய்தி கேட்டு என் நெஞ்சம் எல்லாம் பூரித்து நிற்கிறது என்றார் கொளத்தூர் தா.செ.மணி. (க)

# நகரப் பகுதியில் வெள்ளி மாலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.நகரப் பகுதியில் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இஞைர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். மல்லாகத்தைச் சேர்ந்த லோகநாதன் சதீஸ் (வயது 28 ) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டது.

இந்தப் படுகொலை தொடர்பாக யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

இந்தத் தொலைத் தொடர்பு நிலையத்துடன் இயங்கும் விடுதியில் கடந்த 10 ஆம் திகதி முதல் களுத்துறையைச் சேர்ந்த இருவர் தங்கியிருந்தனர்.

வியாபார நடவடிக்கைகளுக்காக வெளியில் சென்ற அவர்கள் விடுதிக்கு திரும்பிய சமயம், அந்தப் பகுதியில் நின்ற படையினர் இருவரையும் விசாரணை செய்தனர் என்றும் அதன் பின்னர் விடுதியைச் சோதனை செய்யப் போகின்றோம் எனத் தெரிவித்த படையினர் உள்ளே சென்று பார்த்த போது அந்த விடுதியின் பொறுப்பாளரான சதீஸ் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடந்தார் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபரிடம் இருந்த அடையாள அட்டை மூலம் அவர் இனங்காணப்பட்டார் என்றும் -

அவர்களது உறவினர்களை அடையாளம் காட்டி சடலத்தை பொறுப்பேற்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (1)

# பளையை நோக்கி ஷெல் தாக்குதல்: காயமடை்ந்த 14 பேர் ஆஸ்பத்திரியில்

பரந்தன்,ஓக.13

பளையை நோக்கி நேற்றுமுன்தினம் முதல் நடத்தப்பட்டு வரும் ஷெல் தாக்குதலில் காயமடைந்த 14 பேர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த மக்களுக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் செஞ்சிவைச் சங்கம், சுகாதார சேவை அலுவலகம் , தமிழீழ சுகாதார சேவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் வழங்கிவருகின்றனர்.

நேற்று முன்தினம் காயமடைந்தவர்களின் விவரம் வருமாறு:

தவராசா கோகுலன் (வயது 23- பளை), இ.ராஜகிரி (வயது 22 - பளை), என்.ஜெயந்தினி (வயது 46 - பளை), பி.அஸ்மினி (வயது 4 - பளை), என்.சர்மிலா (வயது 11 - வண்ணாங்கேணி), கே.இராமச்சந்திரன் (வயது 71 - புலோப்பளை).


நேற்றுக் காயமடைந்தவர்களின் விவரம் வருமாறு:

லோறன்ஸ் மென்டிஸ் (வயது 50 - செம்பியன்பற்று), மென்டிஸ் விமல்ராஜ் (வயது 15 - செம்பியன்பற்று), தேவதாஸ் கிறிஸ்ரி அன்ரனி (வயது 22 - தாளையடி), கந்தசாமி ராஜேஸ்வரி (வயது 26 - ஆழியவளை), கருணாநிதி அரவிந்தன் (வயது 26 - தாளையடி), கந்தையா பாலகுமார் (வயது 46 - ஆழியவளை), இரத்தினசிங்கம் ஜெயந்திரன் (வயது 22 - ஆழியவளை), கந்தையா பாலகுமார் (வயது 26 - பளை) (1-352)

# இலங்கை அணியின் சாதனைப் பயணம் தொடருமா?

அண்மையில் நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி இலங்கை அணிக்கு ஓர் உலக சாதனைப் போட்டியாக அமைந்தது.

முதல் டெஸ்ட்போட்டியில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, உப தலைவர் குமார் சங்ககார ஆகியோர் மூன்றாவது விக்கெட்டுக்கு மட்டுமன்றி எந்தவொரு



விக்கெட்டுக்குமான இணைப்பாட்டத்தில் கூடுதலான ஓட்டங்களைக் குவித்த ஜோடி என்ற உலக சாதனையைப் படைத்தனர்.

அது மட்டுமன்றி அணித்தலைவர் ஜெயவர்த்தன 374 ஓட்டங்களை எடுத்து டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் பட்டியலில் நான்காவது இடத்தைக் கைப்பற்றி அசத்தினார்.

இந்த டெஸ்ட் போட்டியில் மட்டுமன்றி கிரிக்கெட் அரங்கில் நிகழ்த்தப்பட்ட பல சாதனைகளில், இலங்கை அணிக்குத் தனி இடம் உண்டு.

இலங்கை அணியின் சாதனைப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களைக் குவித்த அணிகளின் பட்டியலில் இலங்கை அணிதான் முதலிடத்தில் உள்ளது. 1997ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட் இழப்புக்கு 952 ஓட்டங்களைக் குவித்தது. இதுவே இன்றுவரை டெஸ்ட்டில் அதிக ஓட்டங்கள் பெறப்பட்ட சாதனையாக உள்ளது. இப்போட்டியில் இலங்கை அணியின் சனத் ஜெயசூரிய, றொசான் மகாநாம ஆகியோர் இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்காக 576 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டு உலக சாதனை படைத்தனர்.

இந்தச் சாதனையை அண்மையில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் ஜெயவர்த்தன, சங்ககார ஜோடி முறியடித்தது.

டெஸ்ட் போட்டியில் மட்டுமல்ல ஒரு நாள் போட்டியிலும் இலங்கையணிதான் முன்னிலையில் உள்ளது. இவ்வாண்டு ஜூலை மாதம் நெதர்லாந்துக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியில் பங்கேற்ற இலங்கையணி 443 ஓட்டங்களைக் குவித்து புதிய உலகசாதனை படைத்தது. இதற்கு முன் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக தென்னாபிரிக்க அணி குவித்த 438 ஓட்டங்கள்தான் அதிக பட்சஓட்டங்களாக இருந்தன. இப்படி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் இலங்கையணி சாதனை அணியாக வலம் வந்துகெண்டிருக்கின்றது.

இலங்கையணியின் சாதனைப் பயணத்துக்கு அணியில் இடம்பெற்றுள்ள திறமை வாய்ந்த வீரர்கள் உறுதுணையாக இருந்து வருகின்றனர். அவர்களது அர்ப்பணிப்புமிக்க ஆட்டம் காரணமாக இலங்கை அணி தொடர்ந்து தனது சாதனைகளைத் தக்க வைத்து வருவதுடன் ஏனைய அணிகளுக்கு ஒரு சவால்மிக்க அணியாகத் திகழ்கின்றது.

இலங்கையணியின் வீரர்களான ஜெயசூரிய, ஜெயவர்த்தன, சங்ககார மற்றும் மாவன் அத்தப்பத்து ஆகியோர் அணியின் எழுச்சிக்குப் பலம் சேர்த்து வருகின்றனர்.

சில அழுத்தங்கள் காரணமாக சமீபத்தில் டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்த முன்னாள் அணித்தலைவர்

**அதிரன்**

சனத் ஜெயசூரிய அணியில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளமை இலங்கை அணியின் பலத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல் இலங்கையணியின் ரசிகர்களுக்கும் மகிழ்ச்சி அளித்துள்ளது.

ஜெயசூரியவைப் பொறுத்தமட்டில் இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அதிக போட்டிகளில் விளையாடியவர் என்ற சாதனைக்கு உரியவர் ஜெயசூரிய. அவர் இதுவரை 363 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

அடுத்து இலங்கையணியின் வெற்றிப் பயணத்துக்கு முக்கிய காரணமாகத் திகழ்பவர் சுழல்பந்து மன்னன் முத்தையா முரளிதரன். டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஆஸ்திரேலிய வீரர் ஷேன்வோர்ன் 685 விக் கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக இலங்கையணியின் சுழல் மன்னன் முரளிதரன் 645 விக்கெட்டுக்களை வீழ்த்தி இரண்டாம் இடத்தில் உள்ளார். அத்துடன் டெஸ்ட் போட்டியின் ஒரே இன்னிங்ஸில் 54 தடவைகள் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி அதிக தடவைகள் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் முரளிதரன். அதுமட்டுமன்றி ஒரு போட்டியின் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 17 தடவைகள் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இவரது அபாரமான பந்து வீச்சு இலங்கை அணியை நெருக்கடியான நிலைகளில் இருந்து பல தடவைகள் காப்பாற்றியிருக்கின்றது.

இவற்றைவிடத் துடுப்பாட்ட வரிசையில் ஜெயவர்த்தன, சங்ககார, டில்ஷான், ரஸல் ஆனோல்ட், உபுல்தரங்க ஆகியோர் தொடர்ந்தும் திறமைகளை வெளிப்படுத்தி அணிக்கு வலுச்சேர்க்கின்றனர்.

அத்துடன் பந்துவீச்சில் சமிந்தவாஸ், மஹ்ரூப், தில்கார பெர்னாண்டோ, மலிங்க பண்டார ஆகியோர் தம்பக்கத்துக்கு விக்கெட்டுக்களைச் சாய்க்கின்றனர்.

இன்னும் ஓரிரு தினங்களில் இலங்கை, தென்னாபிரிக்கா, இந்திய அணிகள் பங்கு கொள்ளும் முத்தரப்புத் தொடர் இலங்கையில் நடைபெறுகிறது. இந்தத் தொடர் தனது சொந்தமண்ணில்நடைபெறுவதால்இலங்கை அணி அதில் சாதிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அத்துடன் மினி உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 14 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறுகிறது. இதில் பங்கு கொள்ளும் இலங்கையின் உத்தேச அணி அறிவிக்கப்பட்டுவிட்டது. இதில் பல முன்னணி வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

இதிலும் இலங்கையணி தொடர்ந்தும் தனது திறமைகளை வெளிப்படுத்தி சாதனைகளை நிலைநாட்டுமா? இதுவே இலங்கை ரசிகர்களின் எதிர்பார்ப்பு. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை கடற்படைத் தளம் மீது புலிகள் நேற்றும் ஷெல் தாக்குதல்!

திருகோணமலை,ஓக.13

திருகோணமலை துறைமுகத்தில் அமைந்துள்ள கடற்படைத் தளம் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் சரமாரியான ஷெல்வீச்சுக்கு இலக்கானது.

திருகோணமலையில் தங்களின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூரில் இருந்து விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று விடிகாலை 3மணிக்கு புலிகள் கடற்படைத் தளத்தைத் தாக்கத் தொடங்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. கடற் படைத் தளத்தின் மீது 'மழை போல' ஷெல்கள் பொழியப்பட்டன என்று திருமலையில் உள்ள தனது செய்தியாளரை மேற்கோள் காட்டி ரொய்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அதிகாலை 3 மணிக்கு ஆரம்பித்த தாக்குதல் காலை 6மணிவரை நீடித்தது. இதன் போது கடற்படைத் தளத்தில் பரவலான சேதங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. இதேசமயம் சீனன் குடா விமானத் தளத்தின் மீதும் ஷெல்கள் வீழ்ந்தன என்றும் தமிழ் நெற் இணையத் தளம் தெரிவித்தது.

தாக்குதல் ஓய்ந்த கையோடு கடற்படைத் தளத்திற்கு அம்புலன்ஸ் வாகனங்கள் பல தடவைகள் சென்று வந்தன என்றும் தமிழ் நெற் தெரிவித்தது.

துறைமுகப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கொள்கலன் வாகனங்கள் சிலவும் நேற்றைய ஷெல் வீச்சினால் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

கடற்படைத் தளம் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக திருகோணமலை மங்கி பிறிட்ஜ் படை முகாமில் இருந்து புலிகளின் சம்பூர் பிரதேசம் நோக்கி பல்குழல் எறிகணைத் தாக்குதல்களைப் படையினர் மேற்கொண்டனர்.

(ஐ-1-12)

# ஷெல் மற்றும் விமானக் குண்டுவீச்சில் 152 தமிழர்கள் பலி! 200 பேர் காயம்!

## செய்தியாளர் மாநாட்டில் சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஓக.12

யுத்தநிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருக்கின்றது. இந்த நிலையில் திருகோணமலை தெற்கு, மட்டக்களப்பு வடக்கு பிரதேசங்களில் தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு படையினர் விமானத் தாக்குதல்களையும் ஷெல் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களையும் மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக 152 முதல் 200 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இப்பகுதிகளிலிருந்து 55 ஆயிரம் பொது மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இரண்டு நாள்கள் உணவு இல்லாத நிலையில் இவர்கள் தவித்துக்கொண்டிருக்கின்றனர். மட்டக்களப்பிலிருந்து இன்று அகதிகளுக்கென 20 லொறிகளில் கொண்டுசெல்லப்பட்ட உணவுப் பொருள்கள் மாங்கேணி இராணுவ சோதனைச் சாவடிகளில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

மனிதாபிமான தேவையைக் கருதி இவ் உணவுப் பொருட்களைக் கொண்டுசெல்ல அனுமதிக்குமாறு நாம் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார்.

(க)

# சிங்களப் பொலிஸாரை தமிழகத்துக்கு அனுப்பிய மத்திய அரசின் செயல் அதிர்ச்சி அளிக்கிறது!

## தமிழக சஞ்சிகை 'ஆனந்த விகடன்' தெரிவிப்பு

சென்னை, ஓக.13

சிங்கள பொலிஸ் அதிகாரிகளை தமிழகத்துக்கு அனுப்பிய இந்திய மத்திய அரசின் அணுகுமுறை ரொம்பவே அதிர்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டில் வெளியாகும் 'ஆனந்த விகடன்' சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள பொலிஸ் அதிகாரிகளுக்கு தமிழகத்தில் அளித்து வந்த பயிற்சியை பாதியிலேயே நிறுத்தி, அவர்களை வேறு மாநிலத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறது மத்திய அரசு. தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் காட்டிய பலமான எதிர்ப்பின் விளைவே இந்த இடமாறுதல்.

இலங்கை மண்ணில் மோதல்கள் நிகழும் இந்த நேரத்தில் - அந் நாட்டு அரசுக்கு எதிராக தமிழ் நாட்டில் கொந்தளிப்பான உணர்வுகள் அலையடிக்கும் இந்த நேரத்தில் - தமிழ் மக்களின் உணர்வு களைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் இப்படியொரு பயிற்சி முகாமுக்கு அனுமதியளித்த மத்திய அரசின் அணுகுமுறை ரொம்பவே அதிர்ச்சியளிக்கிறது.

இலங்கையின் இராணுவ நடவடிக்கைக்கு இவர்கள் உதவ மாட்டார்கள். கூட்டங்களில் அமைதியை ஏற்படுத்தவும், பொதுமக்களை அமைதிப்படுத்தவும்தான் இந்தப் பயிற்சி என்று மத்திய அரசு சொல்வது எடுபடாத சமாதானம்!

நல்லது நடக்கும் போதெல்லாம், மத்திய அரசிடம் வலியுறுத்தி இதை நாங்கள்தான் செய்ய வைத்தோம் என்று நெஞ்சு நிமிர்த்தச் சொல்லும் தமிழக ஆட்சியாளர்கள், தங்கள் கட்டுப்பாட்டு எல்லைக்குள் நடந்திருக்கும் இந்த நெருடலான சம்பவத்துக்குச் சொன்ன பதில் - எதிர்ப்புகள் எழுந்திருப்பதைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசுக்கு இங்குள்ள உணர்வுகளைத் தெரிவித்து, பயிற்சியைப் பாதியில் நிறுத்திவிட்டோம் என்பதே!

இந்தச் சூழ்நிலையில் இப்படியொரு பயிற்சி முகாம் தமிழகத்தில் நடந்திருக்கக் கூடாது என்பதுதான் மாநில அரசின் நிலைப் பாடு என்றால், எங்களுக்கு முறைப்படி தகவல் தெரிவிக்காமலே மத்திய அரசு இதை நடத்தியது மிகப்பெரிய தவறு என்று மிகக் கடுமையாகக் கண்டனம் தெரிவித்திருக்க வேண்டாமா?

மாநில உரிமைகள் பற்றிக் காலகாலமாகக் குரல் கொடுப்பவர்கள், இப்போது அதைச் செய்ய வில்லையே, ஏன்?

- இவ்வாறு 'ஆனந்த விகடன்' தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆடை அமைத்தல் பயிற்சியகம்

யாழ்ப்பாணம்,ஓக.13

வண்ணார்பண்ணை மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் படித்த இளம் பெண்களுக்கான ஆடை அமைத்தல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பற்றிக் வேலைகள், நவீன முறையில் ஆடைகள் அமைத்தல் போன்ற பயிற்சிகளே வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சிகளைப் பெற்றவர்கள் சுயமாகத் தொழில் களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அடுத்த கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சிநெறியில் ஆர்வமுள்ள பெண்களை மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அதன் பணிப் பாளர் கேட்டுள் ளார்.

(203)

# குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. திருகோணமலை கடற்படைத் தளம் மீதும் வடக்கு - கிழக்கிலுள்ள விமானப் படை மற்றும் கடற்படை நிலைகள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் - என்றும் பிரிகேடியர் அதுல ஜெயவர்த்தன கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட விசேட செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(ஐ-12)

# போர்நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்ற நாடுகளுக்கும் குறிப்பாக நோர்வேக்கும் அறிவித்துள்ளோம்.

இங்கு உண்மையான போர்நிறுத்தம் இல்லை எனறே தோன்றுகின்றது. ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் தான் உள்ளது. இண்டு தரப்பினரும் அந்த ஒப்பந்தத்தை மதித்துச் செயற்படுபவார்கள் என நம்புகிறோம். இலங்கையில் மோசமான உள் நாட்டுப் போர் நடைபெறாமல் தடுக்க அது ஒன்றுதான் வழி - என்றார் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர்.

(1-12)

# யாழ்ப்பாணத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*பதில்:* படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று எங்களால் ஊகிக்க முடியவில்லை.

*கேள்வி:* நேற்றைய (வெள்ளி) தாக்குதல்களின் போது விமானத்தைப் பயன்படுத்தினீர்களா?

*பதில்:* உண்மையிலேயே அப்படி ஒரு தகவல் ஊடகங்களில் வந்திருக்கிறது. அதன் மூலோபாயச் சூழ்நிலை கருதி அதுபற்றி என்னால் இங்கு பேசமுடியவில்லை. எங்கள் மக்களைப்பாதுகாப்பதற்காக எங்கள் முப்படைகளையும் பயன்படுத்துவோம் என்பதுதான் என்னால் சொல்லக்கூடியது.

*கேள்வி:* இது குறித்து அரசிடம் கேட்ட போது தாங்கள் ஒரு பட்டத்தைக் கூட அந்தப் பகுதி வான்பரப்பில் பார்க்கமுடியவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இது பற்றிய உண்மை என்ன?

*பதில்:* தாக்குதலுக்கு உட்பட்டவர்கள் அவர்கள் தான் (அரசுத் தரப்பு) அதற்குரிய பதிலைக் கூற வேண்டும். (ஐ-1-12)

# தொலைபேசிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றாக சீர்குலைந்துவிட்டது. யாழ்.நகரம் உட்பட அதனை அண்டிய பகுதிகள் நேற்றிரவு முற்றாக இருளில் மூழ்கின. வானொலி மற்றும் தொலைக்காட்சிகளை இயக்க முடியாததால் செய்திகளை அறிய முடியாத நிலை காணப்பட்டது.

பகலில் ஒரு மணித்தியாலமும் இரவில் ஒரு மணித்தியாலமும் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. எரிபொருள் பற்றாக்குறையே இதற்கான காரணமெனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

ஊரடங்கு உத்தரவு நேற்று முழுநாளும் நீடித்ததால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கக் நேரிட்டது. ஊரடங்கு காரணமாகப் பத்திரிகைகளின் விநியோகமும் தடைப்பட்டிருப்பதால் மக்கள் தகவல்களை அறிய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தொலை. பேசி சேவைகள் தடைப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன என்பதை தெளி வாக அறிந்துகொள்ள முடியவில்லை.

போர் நடவடிக்கை காரணமாக தொலைபேசிக் கோபுரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் உறுதிசெய்துகொள்ள இயலவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்க தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டன என கூறப்படுவதையும் உறுதிசெய்ய முடிசெய்ய முடியவில்லை.

### ஊரடங்கு தொடர்கிறது

நேற்றுமுன்தினம் இரவு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருப்பதால் மக்கள் தங்கள் அவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது அந்தரிக்கின்ற நிலைமை நீடிக்கிறது.

(ஐ-1-12)

# மோதலை உடனடியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றும் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: -

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு மாறாக இலங்கையில் வன்முறைகள் தொடர்வதும் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படுவது குறித்தும் உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பன், நோர்வே ஆகிவை கவலை தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் போர் நடவடிக்கைகளை உடனடியகக் கைவிட்டு பேச்சு மேசைக்கு திரும்ப வேண்டும். இரு தரப்பும் மேலதிக வன்முறைகளை ஏற்படுத்தாமலும் உயிரிழப்புக்களை ஏற்படுத்தாமலும் தடுக்க வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வன்முறைகள் தீர்வு அல்ல.

அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுதை நாம் சகிக்க முடியாது அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் அனுசரனைப் பணிக்கு இணைத்தலைமை நாடுகள் முழு ஆதரவை அழிக்கின்றன. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

அதிகரித்துவரும் மனித அவலங்கள் எமக்கு பாரிய கவலையை அளிக்கிறன்றன. இலகையில் ஏற்கனவே பெருந்தொகையான மக்கள் இடம் பெயர்ந்திருக்கும் நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் மேலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இரு தரப்பினரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் சென்றடைவதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த மனிதாபிமானப் பிரச்சினைக்கு முன்னுரிமை அழிக்க வேண்டும்.

மூதூர் படுகொலை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச் சாட்டுகள் தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் என்று வோண்டுகோள் விடுக்கின்றோம்.

இலங்கையின் நிலைமைகள் குறித்து விரைவில் இணைத் தலைமை நாடுகள் கூடி ஆலோசனை நடத்தவுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்டைதீவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் குரல்' தெரிவித்தது.

இதேவேளை -

குடாக் கடல் பகுதியில் அமைந்திருக்கும் ஆள்களற்ற மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறையை அண்டிய கரையோரப் பகுதியில் தரையிறங்கிய புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே நேற்றுப் பகல் முழுவதும் சண்டை நீடித்தது. புலிகள் மண்டைதீவில் வந்து இறங்கித் தாக்குதல் ஆரம்பித்ததும் அல்லைப் பிட்டிப் பகுதியில் பெருமளவு அரசு துருப்புகள் குவிக்கப்பட்டு புலிகளை முன்னேற விடாது தீவிர தாக்குதல் நடத்தப்பட்டன என்று புலிகளின் வட்டாரங்களை ஆதாரம் காட்டி தமிழ்நெட் செய்தி தெரிவித்தது.

கடற்படையினரால் கைவிடப்பட்ட மண்டைதீவின் ஒரு பகுதியை பின்தளப் பகுதியாகத் தயார்படுத்தி அங்கிருந்து குடாக் கடலுக்கு அப்பால் உள்ள புலிகளின் நிர்வாகப் பிரதேசமான பூநகரி மீது பெரும் படை நகர்வொன்றை மேற்கொள்ள அரச படைகள் ஏற்பாடு செய்துவந்ததை அடுத்தே, அந்தப் பகுதி மீது புலிகள் தாக்குதல் ஆரம்பித்தனர் என்று புலிகளின் அதிகாரிகள் கூறினர் என்று தமிழ்நெற் மேலும் தெரிவித்தது.

மண்டைதீவில் புதிய போர் அரங்கு திறக்கப்பட்டதை அடுத்து அந்தப் பகுதி மீது நேற்றுக் காலை முதல் அரசுப் படைகள் கடும் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதலை ஆரம்பித்தனர். நேற்று நண்பகல் வாக்கில் அந்த பிரதேசத்தின் மீது 'கிபிர்' ஜெட் விமானங்களும் குண்டுகளை வீசித் தாக்கின. இதனால் குடாக்கடலை அண்டிய நாழ் நகரின் கரையோரப் பிரதேசங்களில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

பதற்றம் அதிகரித்து வரும் நிலையிலும் யாழ்.நகரின் கரையோரப் பகுதிகளில் மக்கள் இன்னமும் இருப்பிடங்களில் தங்கியிருக்கின்றனர். சில குடும்பங்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்க நகர முற்பட்ட போதும் ஊரடங்கு உத்தரவு காரணமாக படையினர் அவர்களை வெளியேறவிடவில்லையென்று சொல்லப்படுகிறது.

ஊர்காவற்றுறை, மற்றும் மண்டைதீவுப் பகுதிகளில் உள்ள கடற்படை நிலைகளை இலக்குவைத்து புலிகள் தாகுதல்களைத் தொடுத்து வருகின்றனர் என்று கொழும்பில் கடற்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மண்டைதீவு மற்றும் அதனை அண்டிய ஊர்காவற்றுறை கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டிருப்பதாகக் கூறப்படும் புலிகள் அங்கிருந்து முன்னேறுகின்றனரா என்பதை சுயாதீன வட்டாரங்கள் மூலம் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. நேற்றிரவு 9 மணியளவில் நகருக்கு அண்மித்த தொலைவில் பெரும் துப்பாக்கிச் சமர் நடைபெறுவதுபோன்று சத்தங்கள் அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தன. ஷெல் தாக்குதல்களும் விட்டுவிட்டு இடம் பெறுவதைக் கேட்க முடிந்தது. படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்.நகருக்கு மிக அருகே அமைந்துள்ள மண்டைதீவில் புலிகள் நிலைகொள்வது நகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று கருதப்படுவதாக அவதாணிகள் குறிப்பிடுகின்றனர்.

(ஐ-1-12)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org